# கோபம்

(இது தீர்க்கதரிசி பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து, ‘**கோபம்**’ என்ற தலைப்பில் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அறிய, கீழே குறிப்பிட்டுள்ள செய்திகளை முழுமையாக வாசிக்கவும்.)



**சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து**

# கோபம்

~~~~~

(இது தீர்க்கதரிசி பிரன்ஹாம் பேசிய செய்திகளிலிருந்து, ‘**கோபம்**’ என்ற தலைப்பில் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அறிய, கீழே குறிப்பிட்டுள்ள செய்திகளை முழுமையாக வாசிக்கவும்.)

~~~~~

❶

147. உங்கள் பொறுமை அதிகமாகிக் கொண்டே வந்து, அதற்கு முடிவே இல்லாத அளவுக்கு ஆகிவிடுகின்றது. உங்களைப் பற்றி யாராகிலும் அவதூறாகப் பேசினால், ''நீங்கள் என்ன கூறினாலும் பரவாயில்லை...' என்று நினையுங்கள். அதற்காக கோபப்படாதீர்கள். உங்களுக்கு

கோப உணர்ச்சி ஏற்பட்டால், அவர்களிடம் சண்டையிடுவதற்கு முன்பு, முதலில் போய் ஜெபம் பண்ணுங்கள். பாருங்கள்? ஆம்! அப்படிப்பட்ட சண்டைகளில் ஈடுபடா தீர்கள். அப்படி சண்டையிடுவதை விரும் பாதீர்கள். யாராகிலும் சபையில் எழுந்து நின்று, ''உங்களுக்குத் தெரியுமா? இன்னார் இதை செய்தார்'' என்று கூறுவாரானால்.

'சகோதரனே, அதை கூற உனக்கு வெட்கமாயில்லை" என்று சொல்லி, அவரை நிறுத்தி விடுங்கள்.

148. அப்படி செய்வதற்கு பதிலாக, ''ஓ, அப்படியா?'' என்று அந்த அவதூறை உன்னிப்பாக கேட்பீர்களானால்! கவனி யுங்கள், பரிசுத்த ஆவி ஒரு சாக்கடை குழியல்ல. பாருங்கள்? இல்லை, இல்லை, இல்லை! பரிசுத்த ஆவி தங்கியுள்ள இருதயம், பரிசுத்தம், தூய்மை முதலான வைகளால் நிறைந்துள்ளது. அது தீங்கு

நினையாது, தீங்கு செய்யாது, அது சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் சகிக்கும். பாருங்கள்?

149. கோபப்படாதீர்கள். குடும்பத்தில் சண்டை எழுந்தால், அவர்களுடன் சேர்ந்து கொண்டு நீங்களும் சண்டையிடாதீர்கள். உங்கள் தாய், 'நீ இனிமேல் அந்த சபைக்கு செல்ல அனுமதிக்க மாட்டேன். நீ என்ன ..... உன் கூந்தலை வளர்த்துக் கொண்டு, பாட்டியைப் போல் காணப்படுகிறாய்'' என்று பெண்களாகிய உங்களிடம் கூறுவார் களானால், அவர்களுடன் சண்டையிடா தீர்கள்.

'சரி, அம்மா. பரவாயில்லை. நான் இப்பொழுதும் உங்களை நேசிக்கிறேன். நான் உயிருள்ள மட்டும் உங்களுக்காக ஜெபித்து வருவேன்'' என்று கூறுங்கள். பாருங்கள்?

150. கோபப்படாதீர்கள். பாருங்கள்? கோபம் கோபத்தைப் பிறப்பிக்கும். முதலாவதாக, நீங்கள் கோபப்பட்டால், நீங்கள் பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தி, அதை உங்களை விட்டு விரட்டுகின்றீர்கள். பரிசுத்த ஆவி உங்களை விட்டு சென்று விடுகின்றார். கோபம் கோபத்தைப் பிறப்பிக்கும்.

அன்பு அன்பைப் பிறப்பிக்கும். பாருங்கள்? அன்பினால் நிறைந்திருங்கள். இயேசு, "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ள வர்களாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லா ரும் அறிந்து கொள்வார்கள்,'' என்றார். அன்பு பரிசுத்த ஆவியின் கனியாகும்.

## 63-06-30E உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?

❷

81. ''ஒரு கிறிஸ்தவனாக என்னால் இருக்கவே முடியாது.'' என்றேன். ஆனால் ஒன்றை உங்களுக்கு கூறட்டும், அங்கே ஓஹியோ தெருவில் அந்த இரவில் ஆவியானவர் எனக்குள் வந்தபோது என் கோப சுபாவத்தை நீக்கினது. அன்றோடு அது ஒழிந்தது. நான், "என்னால் அதைச் செய்ய முடியாது. நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்க முடியாது, ஏனெனில் என்னால் அதை மேற்கொள்ள முடியாது. அது எனக்குள்ளாக பிறந்திருக்கின்ற ஒன்று. பையனே, என் அப்பா முரட்டுத்தன மானவர்; பாதி இந்தியரான என் தாயும் கூட, மதுவை கடைசித் துளிவரை விடாமல் குடிக்கும் குடிகாரனிடம் சண்டை போடும் அளவிற்கு கோப சுபாவம் கொண்டவர்களாயிற்றே. அப்படியிருக்க நானா? ஓ, நான் .... என்னிடம் சண்டைக்கு

வருபவர்கள் கடும் உதை வாங்குவார் களே; அவ்வளவுதான். அவர்களை அடிக்க ஒரு ஏணியின் மீது ஏறிச் செல்ல வேண்டியிருந்தாலும் கூட நிச்சயமாக நான் எறிச் சென்று அடிப்பேனே'' என்றேன்.

82. ஆனால் இப்பொழுதோ, நீங்கள் என்னை வெளியே தரதரவென்று முரட்டுத் தனமாக இழுத்துச் சென்று என்னை அடித்துப் போடுங்கள் ... பாருங்கள்? ஏன்? நான் இல்லை? நான் இங்கே எதைக் கூற முயன்று கொண்டிருக்கிறேன்? ஏதோ ஒன்று சம்பவித்தது. அந்த பழைய வலிமை, அந்த பழைய வில்லியம் பிரன்ஹாம் மரித்துவிட்டார், ஒருவர் உள்ளே வந்து விட்டார். ஆகவே அது என்விரோதிக்காக நான் வருத்தப்பட்டு மன மிறங்கச் செய்கிறது. யாராவது எனக்கு ஏதாவதொரு பொல்லாங்கு செய்தால், நான் அவர்களுக் கெதிராக ஜெபம் செய்வதில்லை, நான் அவர்களுக்காக

ஜெபிப்பேன். இது சம்பவிப்பதற்கு முன்னர், நான் அன்றொரு இரவு, நியூ இங்கிலாந்தில் பரிசுத்த ஆவியானவர் அந்த சோதனையை எனக் களித்தார். அவர் எனக்கு வல்லமையை அளித்து அந்த மக்களை நோக்கி நீ என்ன கூற விரும்புகிறாயோ அதை அப்படியே பேசு'' என்று கூறினார். அவர்கள் நடந்து கொண்ட விதமானது .... நான் அங்கே பார்த்து ''நான் உங்களை மன்னிக்கிறேன்'' என்று கூறினேன். சரியாக நான் அவ்விதமாகத் தான் கூற வேண்டு மென்று அவர் எதிர்பார்த்தார். பாருங்கள்? உங்கள் விரோதியை மன்னியுங்கள். பாருங்கள்? உங்களை பாவம் நிறைந்தவர்களாகச் செய்கிறவைகள் இந்த ஆவிகள் தாம். அந்த ஆவிகளை கவனியுங்கள்.

## 59-12-23 கேள்விகளும் பதில்களும்
## COD #11

❸

112. சத்தமிடுகிற ஜனங்களை நான் கண்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் ஜீவியத்தில் சரியாக இருந்ததில்லை. நான் மற்றவர்களை நியாயந்தீர்க்கக் கூடாது. அத்தகைய காரியத்தை நான் செய்யவுங் கூடாது. அப்படி சத்தமிட்ட ஜனங்கள் தான்தோன்றித்தனமான வாழ்க்கை வாழ்ந்ததை நான் பார்த்திருக்கிறேன். மேலும் கீழும் நடனமாடி திரும்பி வந்து பயங்கரமான வாழ்க்கை வாழும் ஆண் களையும், பெண்களையும் நான் கண்டிருக் கிறேன். ஆவியில் நடனமாடி அந்நிய பாஷைகளைப் பேசியும் பயங்கரமான கோப உணர்ச்சி கொண்ட ஆணையும், பெண்ணையும் நான் கண்டிருக்கிறேன். அங்கு ஏதோ தவறிருக்கின்றது. இருந்தா லும் அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங் களை அனுபவிக்கின்றார்கள். அவர்கள்

அதை நம்பி விசுவாசிக்கின்றனர். ஆனாலும் அது வெளிப்பிரகாரத்தில் மட்டுமே காணப்படுகின்றது. அது ஒருக்கா லும் உள்பிரகாரத்தில் வருவதில்லை.

**56-01-21 உள் திரை**

---

❹

47. இப்பொழுது, பிறகு என்ன நடந்ததென்று நாம் காண்போமானால், அவன் மீதியான் தேசத்திற்குத் தப்பி ஓடிப்போனான், அங்கே சிப்போராள் என்னும் பேர் கொண்ட ஒரு எத்தோப் பியப் பெண்ணை அவன் விவாகம் செய்தான். மோசே துவக்கத்திலே மிகவும் கோபக்காரனாக இருந்தான். அதை நாம் அறிந்திருக்கிறோம். அந்த கோப சுபாவத்தை தேவன் அவனிடத்திலிருந்து வெளியே எடுத்துப் போட வேண்டியிருந்

தது. ஆகவே.... பிறகு அவன் இந்த பெண்ணை மணந்தான், அவனுடைய மாமனுக்கு ஒரு வேலைக்காரனாக ஆனான், வனாந்திரத்தின் பின்புறத்தில் ஆடுகளை மேய்த்து வந்தான்.

## 55-06-11 உன் கையிலிருக்கிறது என்ன?

---

❺

10. இப்பொழுது, அவர்கள் தேவனிடம் கூட ஆலோசனைக் கேட்காமல் இத்தனை வேகமாக தூரமாக சென்று விட்டனர். ஏழு நாட்கள் ஆனபோது, நல்லது, தங்கள் கைவசம் தண்ணீர் இல்லை என்று கண்டார்கள். அவர்கள் குடிப்பதற்கு தண்ணீர் எதுவும் இல்லாதிருந்தது. அவர்கள் தங்கள் கால்நடைகளுடனும், தங்கள் மிருக ஜீவன்களுடனும் அங்கே வெளியில் இருந்தார்கள், அவர்களுக்கு

தண்ணீர் இல்லாமலிருந்தது. அது ஏறக் குறைய அப்படியே அவர்களின் முடிவாக இருந்தது போன்று காணப்பட்டது.

இப்பொழுது, அதையே தான் நாமும் செய்கிறோம். சில சமயங்களில் நாம் திடீர் கோப வெறி கொண்டு, தேவனைக் குறித்து சிந்திக்காமல், அதற்காக ஜெபிக்காமல், அதைச் செய்யலாமா செய்யக் கூடாதா என்று கர்த்தரிடம் கேட்காமல் ஏதோவொரு இடத்திற்குப் புறப்பட்டு சென்று விடுகி றோம், அப்பொழுது நம்முடைய ஆசீர் வாதங்கள் தடைபடுவதை நாம் காண்கி றோம். பிறகு சில சமயங்களில் நாம், ‘நல்லது, நான் ஏன் அதிகமான ஆசீர் வாதங்களைக் கொண்டிருக்க முடிய வில்லை என்று வியப்பாயுள்ளதே’ என்று வியப்படைகிறோம். நீங்கள் கவனிக்காமல் இருந்து, உங்களுடைய ஜெப ஜீவியத்தை விட்டு விடுகிறீர்கள். நீங்கள், ‘நல்லது, நான் ஒரு கிறிஸ்தவன்’ என்று கூறலாம். நல்லது,

நீங்கள் ஜெபிக்க வேண்டும் என்பதற்கு எப்பொழுதும் இருந்ததைக் காட்டிலும் அது இன்னும் கூடுதல் அடையாளமாய் உள்ளதே. தினமும் வேதம் வாசியுங்கள். தினமும் ஜெபியுங்கள். தேவனிடம் முதலில் அதைக் குறித்து ஆலோசிக்காமல், அதிக வெறுப்பூட்டும் நேரத்திலோ அல்லது மிகத் துரிதமாகவோ எந்தத் தீர்மானமும் செய்யாதீர்கள். ‘பிதாவே, நான் இதைச் செய்யலாமா?’ என்று அவரிடம் கேளுங்கள். ‘நான் இதைச் செய்வது உமக்குச் சித்தமா?’ என்று அவரிடம் கேளுங்கள். அப்போது பரிசுத்த ஆவியானவர் உங்களிடம் என்ன பேசுகிறார் என்று பாருங்கள். அவர் ஒரு தரிசனத்தை உங்களுக்குத் தராமல் இருக்கலாம், ஆனால் நீங்கள் அவரிடம் உத்தமமாயிருந்து கேட்டால், நீங்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் ஏதாவ

தொரு வழியில் அவர் உங்களோடு பேசுவார்.

## 54-07-23 தீர்க்கதரிசியாகிய எலிசா

---

❻

ஒரு குடிகாரனோ அல்லது பிசாசு பிடித்தவனோ அவ்விதமாகத்தான் செய்கி றான்: அவன் இந்த கோப வலிப்புகளில் ஒன்றால் ஆட்கொள்ளப்பட்டு, வீட்டைச் சுற்றியுள்ள எல்லாவற்றையும் உதைத்து எறிந்து விடுவான். நீங்கள் உங்களைக் குறித்தே வெட்கப்பட்டாக வேண்டும், சபையைச் சேர்ந்தவர்களும் கூட, ஒருக்கால் டீக்கன் வாரியத்தில் உள்ளவர் களும் கூட அவ்வாறு செய்கின்றனர். சகோதரனே, இன்று பிற்பகலில் அவர் களில் சிலரைக் கொண்ட சற்று பெரிய கூட்டம் ஒன்றைக் கொண்டிருக்க விரும்பி

னேன். அது சரிதான். ஆமாம், டீக்கன் வாரியத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் அவ்விதமாக நடந்து கொள்ளுகி றார்கள்.

# 54-07-20A கேதரா தேசத்து வெறிபிடித்த மனிதன்

